**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.3306/ஆ5/2026 நாள். 28/08/2026**

.....

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – 2026 தேசிய அறிவியல் கருத்தரங்கு (National Science Seminar 2026) – 8 முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மாவட்ட அளவிலான அறிவியல் கருத்தரங்கு நடைபெறுதல் – தொடர்பாக |
| பார்வை | சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டுநலப் பணி திட்டம்) கடித ந.க.எண்.031468/எம்2/ எஸ்2 / 2026, நாள்.17.07.2026 |

.....

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டுநலப்பணி திட்டம்) கடிதத்திற்கிணங்க, 2026 தேசிய அறிவியல் கருத்தரங்கு (National Science Seminar 2026) தேசிய அளவில் அக்டோபர் 2026 மாதத்தில் புதுடெல்லியில் நடைபெறும் எனவும் இது தொடர்பாக 8 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு மாவட்ட அளவில் 2026 அறிவியல் கருத்தரங்கு (Science Seminar 2026) நடத்த தெரிவிக்கப்பட்டது. எனவே 31.08.2026 அன்று மாவட்ட அளவிலான அறிவியல் கருத்தரங்கு கீழ்காணும் படி மாவட்ட அளவிலான அறிவியல் கருத்தரங்கு (Science Seminar 2026) நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

**மாவட்ட அளவிலான அறிவியல் கருத்தரங்கு (Science Seminar 2026)**
**நாள்– 31.08.2026 (திங்கட்கிழமை)**
**நேரம் – காலை 9.30 மணி**
**இடம் – ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல் நிலைப்பள்ளி, வேலூர்.**

**மாவட்ட / மாநில அளவிலான அறிவியல் கருத்தரங்கின் விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டு விவரங்களை சார்ந்த மாணவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். மாவட்ட அளவிலான அறிவியல் கருத்தரங்கு போட்டியில் முதல் இரண்டு இடங்களில் வெற்றி பெறுபவர்கள்** மாநில அளவில் முதல் இடத்தில் வெற்றி பெறும் மாணாக்கர் புதுடெல்லியில் நடைபெறும் தேசிய அளிவில் பங்கேற்பார்கள்.

எனவே, குறிப்பிட்டுள்ள நாளில் நடைபெறும் மாவட்ட அளவிலான அறிவியல் கருத்தரங்கில் ஒரு அறிவியல் வழிகாட்டி ஆசிரியருடன் தவறாமல் கலந்துகொள்வதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு –**

1. விதிமுறைகள்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள்,
அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தொடக்கப் பள்ளிகள் ) வேலூர் மாவட்டம்.
   இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர், ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர்.
   (போதிய வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். )
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)